# DEPOSITION OF WITNESS

## Crl.Misc.39
## (CHAPTER XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அமலி | Caste | : | |
| S/o.W/o.D/o. | : | ராஜன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 14.3.2024.

A1 to A3 present.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் வைகுந்தம் கிராமம் காளிப்பட்டி பிரிவு ரோடு அருகில் குடியிருக்கிறேன். என்னுடைய கணவர் பழைய இரும்பு வியாபாரம் செய்து வருகிறார். இந்த வழக்கில் இறந்துபோன சின்னுசாமி என்பவருக்கு சொந்தமான இடத்தில் கடை வைத்துள்ளோம். மேற்படி சின்னுசாமி நியூஸ் பேப்பரை ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு சென்று போடுவார். வேறு ஏதும் தொழில் செய்து வந்தாரா என்றால் இல்லை.

ஆஜர் எதிரிகளில் சந்திரசேகரை எனக்கு தெரியும். மற்ற எதிரிகளை எனக்குத் தெரியாது. சின்னுசாமிக்கு சொந்தமான இடத்தில் குடியிருப்பதால் எதிரி சந்திரசேகரை எனக்குத் தெரியும். 18.05.2018 ம் தேதி நான் எங்கள் கடையில் இருந்தேன். மதியம் 1.00 மணி அளவில் நான் போன் செய்து கொண்டே திரும்பி பார்க்கும்போது, ஆஜர் 1ம் எதிரி அவருடைய வீட்டில் இருந்தார். அதன்பின்னர் நான் 3.00 மணி அளவில் வளைகாப்பு விசேசம் இருந்ததால் நான் என்னுடைய வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதன்பின்னர் 7.00 மணிக்கு நான் என் வீட்டிலிருந்து கரூருக்கு சென்றேன். அப்போது சாட்சி ரமேஷ் என்னிடம் போன் செய்து என் அண்ணன் வந்தாரா என்று கேட்டார். நான் அவரிடம் நான் போன் பேசிக்கொண்டிருந்தபோது உன் அண்ணன் நின்று கொண்டிருந்ததை பார்த்தேன் என்று சொன்னேன். அப்போது ரமேஷ் தன்னுடைய அப்பா இறந்துவிட்டதாக சொன்னார். அப்போதுதான் சின்னுசாமி இறந்த விவரம் தெரியும். வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது. காவல் ஆய்வாளர் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார். ஆனால் என்னிடம் வாக்குமூலம் ஏதும் பதிவு செய்யவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு, அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியளிக்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது 18.5.2018ம் தேதி

நான் காயலாங்கடையில் இருந்தபோது சின்னுசாமி அவரது வீட்டில் இருந்தார் என்றும், மாலை 3.00 மணி சுமாருக்கு பொன்னுசாமி என்பவர் சின்னுசாமியின் வீட்டிற்கு தென்னை மட்டை வெட்ட வந்தார் என்றும், அப்போது சின்னுசாமியின் மூத்த மகன் சந்திரசேகரும் அவருடன் 2 பேர்களும் வீட்டிற்கு வந்துவிட்டு கொஞ்ச நேரம் கழித்து ஒரே வண்டியில் 3 பேரும் சென்றார்கள் என்றும், நான் பொன்னுசாமியுடன் சந்திரசேகருடன் இரண்டு பேர் வந்துவிட்டு போறாங்க என்று கேட்டேன் என்றும் அதற்கு சந்திரசேகருக்கு வேண்டப்பட்டவங்களா இருக்கும்னு சொல்லிவிட்டு போய்விட்டார் என்றும், நான் பேங்கில் வைத்திருக்கும் எனது நகையை மீட்பதற்காக சின்னுசாமியிடம் ரூ.2000/- கடன் கேட்பதற்காக சிறிது நேரம் கழித்து சின்னுசாமியின் வீட்டிற்கு போய் வீடடின் வெளியே நின்று கூப்பிட்டபோது அவர் பதில் ஏதும் பேசவில்லை என்றும், அவர் தூங்கிக்கொண்டிருப்பார் என்று நினைத்துக்கொண்டு வீட்டிற்கு போய்விட்டேன் என்றும் அதன்பிறகு, இரவு 10.00 மணிக்கு மேல் சின்னுசாமி செத்துபோய்விட்டதாக சொல்லி பக்கத்தில் குடியிருப்பவர்கள் போனார்கள் என்றும், நானும் போய் பார்த்தேன் என்றும், சந்திரசேகர் தான் 2 பேரை கூட்டி வந்து சொத்திற்காக அவரது அப்பாவை கழுத்தை இறுக்கி கொலை செய்துவிட்டு, நிலப்பத்திரத்தை எடுத்து சென்றுள்ளார் என்றும் ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. என்னை மிரட்டியதால் தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை;

நான் கரூருக்கு எத்தனை மணிக்கு போய் சேர்ந்தேன் என்றால் இரவு 10.00 மணிக்கு போய் சேர்ந்தேன். அப்போதுதான் ரமேஷ் என்னிடம் அவரது அண்ணன் வந்தாரா என்று கேட்டாரா என்றால் ஆம். கரூரிலிருந்து நான் எப்போது சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றால் சின்னுசாமி இறந்துவிட்டார் என்று சொன்னதால் நான் உடனே வந்துவிட்டேன். நான் சொன்னவாறு எதிரி சந்திரசேகர் அவரது வீட்டிற்கு வரவில்லை என்றும் நான் போலிசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவரது வீடு என்பதால் அவர் எப்போதும் வரப்போக இருப்பார்.

2 மற்றும் 3ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.